# கைத்தறி மற்றும் துணிநூல் துறை

**அனுப்புநர்**

திரு.கே.கே.சாமிநாதன்,எம்.காம்.,பி.எட்.,எச்.டி.சி.,
உதவி இயக்குநர்,
கைத்தறி மற்றும் துணிநூல்,
கோவை-11.

**பெறுநர்**

செயலர்,
கொங்குநாடு கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
ஜி.என்.மில்ஸ் (அஞசல்),
கோயம்புத்தூர் - 641 029

ந.க.2302/2017/ஜே நாள்.27.02.2018

அய்யா,

**பொருள் :** கைத்தறி தொழில் - கைத்தறி மற்றும் துணிநூல் - கோவை சரகம் - 3வது தேசிய கைத்தறி தினம் 07.08.2017 - கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனை மேற்கொள்ளப்பட்டது - பேராதரவு நல்கியமைக்கு நன்றி தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை :**
1. இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல், சென்னை அவர்களின் கடிதம் ந.க.17575/ஜி3, நாள்.26.05.2017
2. மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் கடிதம் ந.க.2302/2017/ஜே, நாள்.09.06.2017

---------

பார்வை 1-ல் காண் இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் சென்னை அவர்களின் கடிதத்தில் மூன்றாவது தேசிய கைத்தறி தினம் 07.08.2017 அன்று மாநில அளவில் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பார்வை 2-ல் காண் மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் கடிதத்தில் கோவை மாவட்டத்தில் கைத்தறி கண்காட்சிகள் நடத்திடவும், அதன் மூலம் பொதுமக்களிடமும், இளைஞர்களிடமும் மற்றும் மாணவர்களிடமும் கைத்தறி தினத்தின் முக்கியத்துவம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை கல்லூரி வளாகத்தில் 06.07.2017 முதல் 08.07.2017 வரை மூன்று நாட்கள் கைத்தறி துணிகளின் கண்காட்சி மற்றும் விற்பனை மதிப்பிற்குரிய கல்லூரியின் செயலர் அவர்களின் அனுமதி மற்றும் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்றது. கண்காட்சியின்போது, மாணாக்கர்களும், கல்லூரி பேராசிரியர்களும், கல்லூரியின் அலுவலர்களும் நல்ல ஆதரவு வழங்கி சிறப்பான முறையில் விற்பனை மேற்கொள்ளப்பட்டது. கல்லூரியின் சார்பாக பெண் பேராசிரியர்கள் கைத்தறி தினத்தன்று அணிவதற்கு மனமுவந்து 100 கோரா பருத்தி சேலைகள் ஒரே வண்ணத்தில் கொள்முதல் ஆணை வழங்கி கைத்தறி நெசவாளர்களுக்கு பேருதவி புரிந்துள்ளார்கள். தங்கள் கல்லூரியின் இத்தகைய ஆதரவின் காரணமாக இம்மாவட்டத்தில் உள்ள பிற கல்லூரிகள் மற்றும் அரசு அலுவலகங்களிலும் விழிப்புணர்வு ஏற்பட்டு, கணிசமான அளவிற்கு கைத்தறி ஜவுளிகளின் விற்பனை ஊக்குவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கைத்தறி கண்காட்சி நடைபெற கனிவுடன் அனுமதி வழங்கி கைத்தறி நெசவாளர்களின் ஜவுளிகளை வாங்கி பேராதரவு நல்கிய தங்கள் கல்லூரியின் மாணாக்கர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மதிப்பிற்குரிய கல்லூரியின் செயலர் அவர்களுக்கும் கைத்தறி துறையின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

27/2/18

உதவி இயக்குநர்
கைத்தறி மற்றும் துணிநூல்
கோவை

27/02/18